திரு. எஸ். ரகுபதி: புதுக்கோட்டை மாவட்டத்தில் குறிப்பாக, திருமயம் சட்டமன்றத் தொகுதியில் அதிகமான உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கே கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று துவங்கப்பட வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இதை நிச்சயமாகப் பரிசீலனை செய்து, இந்த ஆண்டு திருமயம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பொன்னமராவதியிலோ, திருமயத்திலோ, அரிமளத்திலோ ஏதாவது ஓரிடத்தில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் துவக்கி, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஏழையெளிய மாணவர்கள் வசதி பெறுகின்றவண்ணம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 45 நிமிடங்கள் பேசியிருக்க வேண்டும். நிறைவு செய்யாத காரணத்தாலே வேறு வழியில்லாமல் உரை முடிகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (7–1–2019) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–14 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

18. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிஜே1)த் துறையின் 22–3–2018 ஆம் நாளிட்ட அரசாணை(நிலை) எண் 40–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.].

19. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் நாற்பத்து

2019 ஜனவரி 5]

இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

20. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஊரக வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

21. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1996) 89 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]. (தமிழ்–ஆங்கிலம்)

22. 2013–2014 ஆம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆண்டு கணக்குகள். [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

23. 2013–2014 ஆம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக்கழகத்தின் தணிக்கை அறிக்கை. [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதுமில்லை–